தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1969 பிப்ரவரி 26

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 71-ல் இருந்து 79 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

1 ஊராட்சிகளில் மருத்துவ மனை, பிரசவ விடுதி

*80 வினா—**திருமதி வி. ப. பழனியம்மாள்** : மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒவ்வொரு மருத்துவ மனையையும் பிரசவ விடுதியையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, சில கிராமங்கள் மிகவும் உள் அடங்கிய பகுதியில் இருப்பதால் அங்கிருந்து நகர ஆஸ்பத்திரிக்கு பிரசவ கேஸ்களைக் கொண்டு வருவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே ' இன்டீரிய ' ராக இருக்கும் கிராமங்களில் பிரசவ ஆஸ்பத்திரி கட்ட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மிகவும் உள் அடங்கிய கிராமங்களில் பிரைமரி ஹெல்த் சென்டர் மூலமாக சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முனிசிபாலிடி மூலமாகவும் பல மருத்துவ நிலையங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு மெடர்னிடி சென்டர் ஏற்படுத்துவது என்பது இன்றைய பொருளாதார நிலையில் சாத்தியக்கூறாக இல்லை.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மருத்துவமனை அமைக்காவிட்டாலும், 4, 5 பஞ்சாயத்துகளுக்கும் சேர்த்து ஓர் இடத்தில் அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பஞ்சாயத்து யூனியன்களில் இன்றைக்கு இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலேயும் ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. அந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே ஆண் டாக்டர்கள் இருக்கிறார்கள். பெண் டாக்டர்கள் நியமிக்கப்படுவதில்லை. எனவே ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும் ஒரு பெண் டாக்டரை நியமித்தால் பிரசவ கேஸ்கள் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும் ஒரு பெண் டாக்டரை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதற்கு தனிக் கேள்வி போடவும்.

திரு. வை. சுவாமிநாதன்: தற்போது பத்தாயிரம் ஜனத்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு தாய்-சேய் நல விடுதி இருக்கிறது. அந்த அளவைக் குறைத்து ஏழாயிரம் ஜனத்தொகை கொண்ட பகுதிக்கு ஒரு தாய்-சேய் நல விடுதி ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது நல்ல யோசனைதான். ஆனால் பொருளாதார நிலையையொட்டி அதை இப்பொழுது ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. இ. பொன்னுமலை: தற்போது எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் இதுபோன்ற பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது ஏறத்தாழ 2,535 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: சார், பிரைமரி ஹெல்த் சென்டர்கள் வாடகைக் கட்டடத்தில் இருப்பதால், சொந்தக் கட்டடத்திற்கு மாற்றவேண்டுமென்று நங்கவெள்ளி பஞ்சாயத்திலிருந்து விண்ணப்பம் அரசாங்கத்திற்கு அனுப்பி அதற்கான இடத்தையும் வாங்கிப் போட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரைமரி ஹெல்த் சென்டரை வாடகைக் கட்டடத்திலிருந்து சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது பற்றிய விவரம் வந்திருக்கிறதா என்று தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: இந்தப் பிரைமரி ஹெல்த் சென்டரிலிருந்து டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று வைத்திய வசதி அளிப்பதற்குப் பல இடங்களிலே ஜீப்கள் இல்லாத

நிலே இருக்கிறது. அதோடு பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு நல்ல கட்டடங்களும் இல்லாமல் இருக்கிறது. இக் குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்குப் புறம்பாக இருப்பதால், தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மருத்துவ மனை என்று இல்லாவிட்டாலும் நகர பஞ்சாயத்து களிலே மருத்துவ மனை ஏற்படுத்த சர்க்கார் யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப் போது ஏறத்தாழ 205 மெடர்னிடி சென்டர்கள் முனிசிபாலிடி மூலமாக நடந்து கொண்டு வருகின்றன.

பள்ளிகளுக்குக் கட்டட மானியம்

*81 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : } மாண்புமிகு கல்வி
திரு ரா. ரா. முனுசாமி: }

தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடை யளிப்பாரா—

உயர்தர பாடசாலே, ஆரம்பப் பாடசாலே, உயர்தர ஆரம்பப் பாடசாலே ஆகியவைகளுக்கு முறையே கட்டடங்கள் கட்டுவதற்கு சர்க்காரால் எவ்வளவு பணம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த விவர அறிக்கை யிலே 50 சத விகிதம் என்று சொல்லிவிட்டு அதில் குறிப்பிட்ட தொகைகள் எல்லாம் உயர்தரப் பாடசாலே, உயர் தொடக்கப்பள்ளி என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறது. ஆனல், இன்றைக்கு கட்டக் கூடிய கட்டடங்களினுடைய மதிப்பின் அடிப்படையில் 50 சத விகிதம் கொடுக்கப்படுகிறதா அல்லது எது குறைவாக இருக் கிறதோ அந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகிறதா? இது நீண்ட நாட்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட தொகை. இப் பொழுது விலேவாசி உயர்ந்திருக்கிறது. ஆகவே, கட்டடத்தி னுடைய மதிப்பின் அடிப்படையில் 50 சத விகிதம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கிற முறை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐம்பது சத விகிதம் அல்லது எது குறைவாக இருக்கிறதோ அது கொடுக்கப்படுகிறது தனிப்பட்ட பள்ளிகளுக்கு. நிதி வசதி பெருகும்போது இதைப் பற்றி யோசிக்கலாம்.

*717–720-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.